| F–0828 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**First Semester**

தமிழ்

இக்கால இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. 'நரி உயிர்ச்சிறு சேவகர்' என்று பாரதியார் யாரைக் குறிப்பிடுகிறார்?

2. 'மண்படு கல்வி' என்று பாரதியார் எதனைக் குறிப்பிடுகிறார்?

3. புதுக்கவிதை என்றால் என்ன?

4. பட்டாம்பூச்சி விற்பவன் யார்?

5. சிறுகதை வரைவிலக்கணம் கூறுக.

6. பிரபஞ்சன் குறிப்பு வரைக.

7. குறுநாவல் என்றால் என்ன?

8. 'குத்தகை மனிதர்கள்' யார்?

9. கடமை என்றால் என்ன?

10. அரு.சோ குறிப்பு வரைக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இளமைக் காதல் குறித்து, பாரதியார் கூறவன யாவை?

(அல்லது)

(ஆ) பாரதியார் சுயசரிதையில் மணம் குறித்துக் கூறுவன யாவை?

12. (அ) தூர்வாரும் போது ஏற்படும் இளமைக்கால மகிழ்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பிள்ளைப்பருவ நினைவுகள் குறித்து நா.முத்துக்குமார் கூறுவன யாவை?

13. (அ) 'கற்பு' குறித்துப் புதுமைப்பித்தன் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) வீட்டின் மூலையில் சமையலறை நாவலில் காணலாகும் பெண்ணியக் கருத்துக்களைக் கூறுக.

14. (அ) 'துணிந்தவன்' நாவலில் காணலாகும் சமூக மதிப்பீடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) துணிந்தவன் குறுநாவலின் கதைப்போக்குக் குறித்து எடுத்துரைக்க.

15. (அ) கடமை நாடகம் சமூகத்திற்கு அளித்திடும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கடமை நாடகம் வடிவத்தினை எடுத்துரைக்க.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாரதி சுயசரிதையில் கல்வி குறித்துக் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

17. நா.முத்துக்குமார் கவிதையில் காணலாகும் சமூக மதிப்பீடுகள் குறித்து எழுதுக.

18. பொன்னகரம் கதையில் காணலாகும் வாழ்க்கை முறை குறித்து எழுதுக.

19. மாதவன் கதாப்பாத்திரத்தின் மூலம் வல்லிக்கண்ணன் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

20. கடமைகள் குறித்து அரு.சோ கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

---

| F–0829 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Second Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் – சிலப்பதிகாரம் –மதுரைக்காண்டம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'யாதுநும் ஊர்?' – எனத் கோவலன் யாரைக் கேட்டான்?

2. 'தென்னவர் காக்கும் நாடு' – யாது?

3. 'மாடலன்' – யார்?

4. 'மன்பெருஞ்சிறப்பின் மருதிக்கிழவன்' – என்று கண்ணகி யாரைக் குறிப்பிடுகிறாள்?

5. 'கள்வன்' என்று குற்றம் சாட்டப்பட்டவன் யார்?

6. 'பெண்டிரும் உண்டு கொல்' – யார் கூற்று?

7. 'கொற்கை வேந்தன்' – எனக் கண்ணகி யாரைக் குறிப்பிடுகின்றாள்?

8. 'கூடல் நகர்' – எது?

9. சுவர் ஓவியர் போலப் பேசாது இருந்தனர் என்று இளங்கோவடிகள் யாரைக் குறிப்பிடுகின்றார்?

10. கொற்றவையின் கோயிற்கதவு மூடிக் கொண்டது ஏன்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) மறையோன் கூறிய வழியின் இயல்புகளைக் கேட்ட கவுந்தியடிகள் யாது பதில் கூறினார்?

(அல்லது)

(ஆ) சாலினிக்குப் புனைந்த கொற்றவைக் கோலம் எவ்வாறு அமைந்திருந்தது?

12. (அ) "கடக்களிறு அடக்கிய கருணை மறவ" — யார் கூற்று? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) எழுகென எழுந்தாய் என்செய்தனை? என்று கேட்ட கோவலனுக்குக் கண்ணகி கூறிய பதிலுரை யாது?

13. (அ) தன் கணவன் கொலை செய்யப்பட்ட செய்தி அறிந்து கண்ணகிபட்ட துயரினை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்ணகியின் நிலை கண்டு மதுரைநகர் மக்கள் உரைத்த மொழிகளை எடுத்துரைக்க.

14. (அ) 'யாரையோய் நீ மடக் கொடியோய்' — எனக் கேட்ட மன்னனுக்குக் கண்ணகி உரைத்த பதில் மொழிகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பூம்புகார் நகரத்துக் கற்புடை மகளிர் பற்றிக் கண்ணகி கூறியவற்றைக் குறிப்பிடுக.

15. (அ) மதுரை ஏரியுண்ட அவலத்தை நும்பாடப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

(ஆ) தன்கையைத் தானே துணித்த தென்னவன் யார்? அவ்வரலாற்றினை விவரிக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை விடை தருக.

16. கொற்றவை வழிபாடு குறித்துச் சிலப்பதிகாரம் கூறும் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை தருக.

17. மதுரைக்காண்டத்தில் இடம்பெறும் இருகனவுகள் குறித்துக் கட்டுரை தருக.

18. ஆய்ச்சியர் குரவை தரும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. பாண்டியனுக்கும் கண்ணகிக்கும் நடந்த வாதப் பிரதிவாதங்களை விவரிக்க.

20. கட்டுரை காதையில் மதுராபதித் தெய்வம் கூறிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

———————

**F–0830**

| Sub. Code |
|---|
| 7BLT2S2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Second Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் – திருக்குறள் – அறத்துப்பால்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ‘நீடுவாழ்வார்’ – யார்?

2. ‘மகன் தந்தைக்காற்றும் உதவி’ யாது?

3. ஞாலத்தின் மாணப் பெரிது எது?

4. சான்றோர்க்கு அணியாக வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

5. தீதுண்டோ மன்னுமுயிர்க்கு எப்போது?

6. ‘பேரறிவாளன் பெற்ற திரு’ – எத்தகையது?

7. உயிர்க்கு ஊதியமாக வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

8. வாய்மை எனப்படுவது யாது?

9. தன்னைத் தான் காக்க என்ன செய்ய வேண்டும்?

10. உடம்போடு உயிரிடை நட்பு எது போன்றது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க

11. (அ) நீரின் இன்றியமையாமை குறித்த திருக்குறள் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) அறன் வலியுறுத்தலின் தேவையை விளக்குக.

12. (அ) நடுவு நிலைமை – அதிகாரம் கூறும் கருத்துக்களைத் தருக.

(அல்லது)

(ஆ) ஒழுக்கமுடைமையின் சிறப்புக்களை விளக்குக.

13. (அ) புறங்கூறாமை குறித்து திருவள்ளுவர் கூறுவனவற்றை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பயனில சொல்லாமை குறித்த கருத்துக்களை விளக்குக.

14. (அ) இறவாது நிற்கும் புகழை திருக்குறள் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) கூடா ஒழுக்கம் – அதிகாரம் தரும் கருத்துக்களை புலப்படுத்துக.

15. (அ) நிலையாமைக் கருத்துக்களை, தொகுத்தெழுதுக

(அல்லது)

(ஆ) ஊழின் வலிமை குறித்து திருவள்ளுவர் கூறுவன யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. இல்லறவாழ்வின் இயல்புகளை வாழ்க்கைத்துணைநலம், புதல்வரைம்பெறுதல் அதிகாரங்களின் வழி தொகுத்தெழுதுக.

17. திருக்குறள் குறிப்பிடும் உடைமைகளை அறத்துப்பாலின் மூலம் விளக்கி எழுதுக.

18. இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல். ஒப்புரவு அறிதல் – ஆகியன குறித்து விளக்குக.

19. துறவொழுக்கம் குறித்து, திருக்குறள் கூறும் கருத்துக்களை கட்டுரை வடிவில் எழுதுக.

20. வாழும் இலக்கியம் திருக்குறள் என்பதற்கான சான்றுகளை ஆராய்ந்து மதிப்பிடுக.

———————

| F–0831 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Second Semester**

தமிழ்

அற இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　(10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நாலடியார் எத்தனை பாடல்களைக் கொண்டது?
2. பெரியோர்க்குப் பெருமை தருவது யாது?
3. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்?
4. தன் மனதை அடக்கியவர்கள் யார்?
5. ‘குழவி தளர் நடை இனிமை’ ஏன்?
6. அதர் சென்று வாழக் கூடாது. ஏன்?
7. நீதி நெறிவிளக்கத்தின் ஆசிரியர் யார்?
8. எவர் செருக்குக் கொள்ளக் கூடாது?
9. நல்ல வேந்தன் யார்?
10. பிறவிப்பெருங்கடலை நீந்தாதவர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நாலடியார் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) சான்றாண்மை மிக்கோரின் செயல்கள் யாவை?

12. (அ) 'கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்' ... பாடலின் கருத்தை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) பெரியோரை எவ்வாறு வயப்படுத்த வேண்டும்?

13. (அ) குழவி பிணியின்றி வாழ்தல் இனிது விளக்குக.

(அல்லது)

(ஆ) கொல்லாமையின் சிறப்புக் குறித்து எழுதுக.

14. (அ) கல்வியில் சிறந்தவர் அஞ்சாமை வேண்டும் – விளக்குக.

(அல்லது)

(ஆ) செல்வத்தின் சிறப்பு யாது?

15. (அ) நல்ல மன்னனின் இயல்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) நாட்டின் ஒழுக்கம் கெடக் காரணம் யார் யார்?

பகுதி இ (3× 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மேன்மக்களின் சிறப்பியல்புகளை நாலடியார் எவ்வாறு எடுத்துரைக்கின்றது?

17. நான்மணிக்கடிகை உணர்த்தும் அறநெறிகளைத் தொகுத்தெழுதுக.

18. மனித வாழ்வு மேம்பட இனியவை நாற்பது பாடல்கள் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

19. செல்வத்தை விட, கல்வி உயர்வு என்பதனை நீதிநெறி விளக்கம் வழிநின்று விளக்குக.

20. அரசனின் சிறப்பியல்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–0832 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2C2 |

B.Lit. **DEGREE EXAMINATION, APRIL 2024.**

**Second Semester**

தமிழ்

இலக்கணம் நன்னூல் (சொல்லும் அணியும்)

**(CBCS 2017 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.**

1. அஃறிணைப் பால்கள் எவை?

2. வினைச்சொற்களின் வகைகள் யாவை?

3. கால வழுவமைதி விளக்குக.

4. இரட்டைக் கிளவி என்றால் என்ன?

5. ‘ஏ’ கார இடைச்சொல் எத்தனை பொருள்களில் வரும்.

6. ஓரறிவுயிர்கள் எவை?

7. உதாரத்தின் இலக்கணம் யாது?

8. பொதுவணியியல் கூறும் சமாதி என்பது எதைக் குறிப்பிடுகின்றது?

9. ‘விலக்கு உருவகம்’ – விளக்குக.

10. ஒட்டணி பற்றிக் குறிப்பிடுக.

## பகுதி ஆ  $(5 \times 5 = 25)$

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.**

11. (அ) மூவிடங்களை விவரி.

(அல்லது)

(ஆ) வினையெச்ச வாய்பாட்டினை எழுதுக.

12. (அ) இடத்தொகைக்கும் பெயர் தொகைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.

(அல்லது)

(ஆ) வழுக்கள் குறித்து விவரிக்க.

13. (அ) 'அந்தில்', 'ஆங்கு' என்ற இடைச்சொற்களின் இலக்கணம் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்களை எடுத்தெழுதுக.

14. (அ) தொடர்நிலைச் செய்யுளின் இலக்கணம் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) வலியின் இலக்கணம் குறித்துப் பொதுவணியியல் கூறுவனவற்றை எழுதுக.

15. (அ) தீவக அணியின் இலக்கணத்தைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்றவணியை விவரிக்க.

## பகுதி இ  $(3 \times 10 = 30)$

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.**

16. சொல்லின் வகைகளை எடுத்துரைக்க.

17. தொகைகளின் வகைகளை எடுத்தியம்புக.

18. உரியியல் கூறும் உயிர்ப்பொருள் வகைகள் குறித்தெழுதுக.

19. பொதுவணியியல் எடுத்துரைக்கும் செய்யுள் நெறி குறித்துக் கட்டுரைக்க.

20. வேற்றுப்பொருள் வைப்பணியை விவரிக்க.

| F–0834 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT3S2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Third Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் – திருக்குறள் – பொருட்பால்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. புலவர் தொழில் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவது யாது?

2. 'நல்லார் தொடர் கைவிடலால்' ஏற்படும் தீமை யாது?

3. 'பீலி பெய் சாகாடும் அச்சிறும்' – எப்போது?

4. 'இறந்த வெகுளியின் தீது' என்று திருவள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

5. 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்' – நின்றது எது?

6. 'குடியைக் குடியாக வேண்டுபவர்' யாது செய்ய வேண்டும்?

7. 'திறப்பாடு இலாதவர்' – எனத் திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

8. வினைத்திட்பம் என்பது யாது?

9. 'கற்றறிந்தார் கல்வி விளங்கும்' – எப்போது?

10. நாட்டிற்கு அணியென்று சொல்லப்படுவன யாவை?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கல்லாமையின் இழிவு குறித்துக் குறள் கூறும் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'கேள்வி' யின் சிறப்புக்களை நும்பாடப் பகுதி கொண்டு விளக்குக.

12. (அ) காலம் அறிதலின் இன்றியமையாமையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சுற்றம் பேணுதலால் எய்தும் நன்மையினைத் திருக்குறள் வழி நின்று விளக்குக.

13. (அ) செங்கோன்மையின் சிறப்பையும் கொடுங்கோன்மையின் தீமையையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆள்வினையுடைமையின் சிறப்புக்களை விளக்குக.

14. (அ) சொல்வன்மையின் ஆற்றலை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தூதுக்கான இலக்கணம் தந்து அதனை மேற்கொள்வோர்க்குரிய ஒழுகலாறுகளை விவரிக்க.

15. (அ) அவையறிதல், அவைஞ்சாமை குறித்துத் திருக்குறள் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பொருள் செயல்வகை குறித்துத் திருவள்ளுவர் கூறுவனவற்றைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. இறைமாட்சி – கல்வி கேள்விகளால் சிறக்குமாற்றை விவரித்துக் கட்டுரை தருக.

17. வினை செயற்குரிய ஒழுகலாறுகளைத் திருக்குறள் வழி நின்று விவரிக்க.

18. அமைச்சருக்கான தகுதிகளைத் திருவள்ளுவர் எவ்வாறு நிர்ணயிக்கிறார்?

19. நாட்டின் இலக்கணம், அரணாக விளங்குவன, படையின் மேன்மை ஆகியன பற்றிக் குறள் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

20. திருக்குறள் பொருளதிகாரத்தில் புலப்படும் வாழ்வியல் விழுமியங்களை விவரிக்க.

**F–0835**

**Sub. Code**
**7BLT3C1**

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024.**

**Third Semester**

தமிழ்

சமய இலக்கியம்

**(CBCS 2017 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    ($10 \times 2 = 20$)

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.**

1. திருநாவுக்கரசரை இறைவன் என்ன நோய் கொடுத்து ஆட்கொண்டான்?

2. சுந்தரரின் மனைவிமார்கள் யாவர்?

3. மாணிக்க வாசகரின் இயற் பெயர் யாது?

4. மாணிக்க வாசகர் யாரிடம் அமைச்சராகப் பணியாற்றினார்?

5. காளிங்கன் மேல் நடம்புரிந்தவன் யார்?

6. குவாலய பீடம் என்பது என்ன?

7. நீதியின் பால் தாகம் கொண்டோர் யார்?

8. வேதத்தின் தத்துவம் எப்போது கிடைக்கும்?

9. பராபரக்கண்ணி என்றால் என்ன?

10. சொல்லரிய ஞானச் சுடர் எது?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.**

11. (அ) திருஞான சம்பந்தர் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) தமக்குற்ற நோயினைத் திருநாவுக்கரசர் எவ்வாறு எதிர் கொண்டார்?

12. (அ) பிறப்பின் வகைகளை மாணிக்க வாசகர் எவ்வாறு வகைப்படுத்துகிறார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதரின் சிறப்புக்கள் யாவை?

13. (அ) 'திருமாலிருஞ் சோலை' – சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'கூடிடு கூடலே' என ஆண்டாள் கூறுவன யாவை?

14. (அ) தூயமனத்தோர் யாவர்? இயேசுபிரானின் மாலைப் பிரசங்கம் கொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) தீமை செய்யாமல் வாழ்வது எங்ஙனம் என்று கண்ணதாசன் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

15. (அ) பராபரக்கண்ணி உணர்த்தும் இறைவனின் பெருமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பராபரக்கண்ணியின் சமயச்சிந்தனைகளை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.**

16. தோடுடைய செவியனைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு புகழ்ந்துரைக்கிறார்? விவரிக்க.

17. சிவபுராணத்தின் சிறப்பினை எடுத்துரைக்க.

18. கண்ணபிரானின் சிறப்புகளை நாச்சியார் திருமொழி கொண்டு விளக்குக.

19. காலைப் பொழிவுச் சிறப்புக்களை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

20. பராபரக்கண்ணியில் காணலாகும் இறைச்சிறப்புக்களை எடுத்துரைக்க.

———————

| F–0836 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT3C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Third Semester**

தமிழ்

இலக்கணம் (அகமும் புறமும்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. அன்பின் ஐந்திணையைக் குறிப்பிடுக.

2. ‘அறத்தொடு நிற்றல்’ எப்பொழுது நிகழும்?

3. ‘வன்புறை’ என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

4. ‘ஒரு வழித் தணத்தல்’ குறித்து எழுதுக.

5. விரிச்சி என்றால் என்ன?

6. ‘நெடுமொழி வஞ்சி’ – துறை விளக்கம் தருக.

7. எயிற்போரின் சிறப்பைக் குறிப்பிடுக.

8. ‘மூதின் முல்லை’ என்றால் என்ன?

9. ‘பூவை நிலை’ குறித்து எழுதுக.

10. ‘செவியறிவுறூஉ’ விளக்கம் தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இயற்கைப் புணர்ச்சியின் வகைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) கற்பில் நிகழும் பிரிவின் வகைகளை விளக்குக.

12. (அ) பாங்கியின் கூட்டத்தின் வகைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) 'பகற்குறி' – குறித்து விளக்குக.

13. (அ) கொற்றவை நிலை பற்றிய செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மகட்பாற்காஞ்சித் துறையை விளக்கி எழுதுக.

14. (அ) உழிஞை மறவரின் மதிற்போரினை விளக்குக.

(அல்லது)

(ஆ) வாகைத்திணை கூறும் அரசனின் சிறப்புக்களை எழுதுக.

15. (அ) பரிசில் நிலை – பரிசில் விடையை ஒப்பிடுக.

(அல்லது)

(ஆ) கொடிநிலை கந்தழி வள்ளி ஆகிய துறைகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ஐந்து திணைகளுக்கும் உரிய முதல், கரு, உரிப்பொருட்களைத் தொகுத்தெழுதுக.

17. பாங்கியின் மதிஉடன்பாடு களவியலில் இடம் பெறும் பாங்கினை விவரிக்க.

18. கரந்தைத் திணைப்படலங்கள் காட்டும் போர்முறைகளைத் தொகுத்தெழுதுக.

19. வாகைத் திணை காட்டும் தமிழர் வாழ்வியலை விளக்குக.

20. பாடாண் திணையின் சிறப்புக்களைப் புலப்படுத்துக.

———————

| F–0837 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS3A1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Third Semester**

தமிழ்

திறன் அடிப்படையிலான பாடம் : கோயிற்கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ‘புனையா ஓவியம்’ – பொருள் தருக.

2. ‘தூங்கானை மாடம்’ – விளக்கம் தருக.

3. விமானம் என்று எதனைக் குறிப்பிடுகிறோம்?

4. பல்லவர் காலக் கோயில்கள் எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர்களைத் தருக.

5. ‘துவாரசாலை’ எனக் குறிக்கப் பெறுவது யாது?

6. ‘மண்ணீடு’ – என்றால் என்ன?

7. ‘மைத்ரேயர்’ உருவம் எங்கே கண்டெடுக்கப்பட்டது?

8. ‘ஐந்து உலோகக் கலவை’ எவ்வாறு அழைக்கப்பெறுகிறது?

9. சித்தன்ன வாசல் குகைக் கோயிலைத் தோற்றுவித்தவர் யார்?

10. இராமாயணக் காட்சிகள் முழுமையும் மேல்விதானத்தில் தீட்டப்பெற்ற கோயில் எங்குள்ளது?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'கண்ணுள் வினைஞர்' யார்? அவர் தம் பணிகள் யாவை?

(அல்லது)

(ஆ) 'பள்ளிப்படை' – விளக்கம் தருக.

12. (அ) குடைவரைக் கோயில்கள் – விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) இராஜேந்திர சோழனின் கோயிற்பணிகளை விவரிக்க.

13. (அ) சுதையாலான உருவங்கள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன?

(அல்லது)

(ஆ) கற்கோயில்களில் இரதங்கள் அமைந்திருக்கும் பாங்கை விவரிக்க.

14. (அ) 'ஆடவல்லான்' – சிற்பப் பாங்கை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'செப்புக்கலையின் பொற்காலம்' என்று ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்? விளக்குக.

15. (அ) சேரர் கால ஓவியங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்பெறும் சுந்தரமூர்த்தி நாயனார் குறித்த ஓவியப் பாங்கை விவரிக்க.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்ககாலக் கட்டடக் கலை குறித்துக் கட்டுரை தருக.

17. தமிழகத்தில் கோயில்கள் எழுப்பப்பட்டமைக்கான காரணங்களை விளக்கிக் கட்டுரை தருக.

18. திருக்கோயில் கோபுரங்களின் அமைப்பு முறைகளை விவரிக்க.

19. தமிழகத் திருக்கோயில்களில் காணப்பெறும் செப்புத் திருமேனிகள் பற்றி விளக்குக.

20. பண்டைக்கால ஓவிய முறைகளை விவரித்து விளக்குக.

———————

| F–0838 |
|---|

| Sub. Code |
|---|
| 7NME3D |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Third Semester**

தமிழ்

துறை சாரா விருப்பப்பாடம் – மக்கள் தகவல் தொடர்பியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக.

1. கருத்தை நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூறக்கூடிய குறியீடு எது?

2. செய்திகளைச் செதுக்கி வைக்கும் முறையின் பெயர் என்ன?

3. பேச்சுநிகழ்வின் செயல்திட்டம் இரண்டைக் கூறுக.

4. பேச்சுக்கலையின் இருநிலைகள் யாவை?

5. தொடக்ககாலச் செய்திப்பரவல் எவை?

6. மரபுவழிப் பரவல் என்றால் என்ன?

7. தொலைக்காட்சி வழிச் செய்திப்பரவலின் வகைகள் எத்தனை?

8. ஒலிபரப்புக்கலையின் உன்னத நிலைகள் எவை?

9. சாதனங்களின் பயன்பாட்டு அடிப்படையின் முறைகளைக் கூறு.

10. நீராடி – விளக்குக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) ஊர்ப்பஞ்சாயத்து முறை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வளமைக் குறியீட்டுச் செய்திப்புலப்பாடு – விளக்குக.

12. (அ) பல்துறையறிவும் பன்மொழிப் புலமையும் வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) எடுத்துரைக்கும் முறையில் தெளிவு வேண்டும் என்பதை விளக்குக.

13. (அ) மின்னணுச் சாதனங்களில் செய்திப்பதிவு பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) பத்திரிக்கைகளில் செய்திப்பதிவு முறை தொடர்பானவைகள் எவை?

14. (அ) கணிப் பொறியின் வருகையின் பயன்களைக் கூறு.

(அல்லது)

(ஆ) மின்னணு இதழ்களின் சிறப்பைக் கூறுக.

15. (அ) திரைப்படத்துறை வழிச்சுற்றுச்சூழல் கல்விப்பணி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சுற்றுச்சூழல் கல்வி மேம்பாடு பற்றிக் கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளி.

16. கருத்தறிவிப்பில் நாட்டுப்புறக்கலைகள் குறித்து விவரி.

17. பேச்சுக்கலையின் சிறப்புத்தன்மைகள் பற்றி விளக்குக.

18. செய்திப் பரவலின் வகைகளை விவரி.

19. மின்னணுச் சாதனவழிச் செய்திகள் குறித்து விவரி.

20. சுற்றுச்சூழல் கல்வியின் பயன்கள் குறித்து கட்டுரை வரைக.

---

| F–0839 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Fourth Semester**

தமிழ்

காப்பிய இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　(10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி

1. மணிமேகலையின் பழம் பிறப்பு யாது?

2. பீடிகை முன் இருந்த நதியின் பெயரைக் குறிப்பிடுக.

3. குகனது வேண்டுகோள் யாது?

4. குகனது அன்பை இராமன் எவ்வாறு பாராட்டினான்?

5. சிறுத்தொண்டர் குறிப்பு வரைக.

6. சிறுத்தொண்டர் அமுது படைக்கும் திறத்தினைக் கூறுக.

7. தேவதாயின் அன்புரை யாது?

8. திருமகன் கூறிய ஆறுதல் யாது?

9. ‘சீறா’ என்பதன் பொருள் யாது?

10. பெண்மான் எடுத்த முடிவினைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அறவணரை மணிமேகலை தொழுத முறையினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரன் குறித்து அந்தணர்கள் கூறியவை யாவை?

12. (அ) குகப்படலத்தில் இராமனின் உணர்வு மொழியினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) குகப்படலத்தில் இலக்குவனின் உணர்வு மொழியினைக் கூறுக.

13. (அ) சிறுத்தொண்டரின் வீரம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறுத்தொண்டர் தம் வாழ்வின் குறிக்கோள் குறித்து எழுதுக.

14. (அ) சூசையும் மரியும் திருமகணைக் கண்டு இன்புற்ற முறை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மறை பொருளாய் திருமகன் கூறிய கருத்துக்களை எடுத்துரைக்க.

15. (அ) மான் தன் இனத்திடம் வேண்டிக்கொண்ட முறையினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) முகமது நபிகள் வனத்திடம் கண்ட காட்சிகள் யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. புத்தபீடிகை குறித்துக் கட்டுரை வரைக.

17. குகனின் பக்தித் திறம் குறித்துக் கட்டுரை வரைக

18. சிறுத்தொண்டரின் பக்தித் திறம் குறித்து எழுதுக.

19. சூசையும் மரியாளும் திருக்குழந்தைக்காக வருந்திய முறையினைத் தொகுத்துரைக்க.

20. நபிகள் நாயகம் பெண் மானிற்காக பிணை நின்ற திறம் குறித்துக் கட்டுரை எழுதுக.

---

| F–0840 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Fourth Semester**

தமிழ்

தொல்காப்பியம் – எழுத்ததிகாரம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. வினா எழுத்துக்கள் எவை?

2. ஓர் எழுத்தாகும் உயிரெழுத்துக்கள் எவை?

3. புணர்ச்சி என்றால் என்ன?

4. மண் + தீது = ?

5. மகப்பெயர்ப் புணர்ச்சியில் என்ன சாரியை வரும்?

6. சுவைப் பெயராகும் புளி புணர்ச்சியில் எவ்வாறு அமையும்?

7. தெவ்வுக்கடுமை என்ற சொல்லின் புணர்ச்சியை விளக்குக.

8. 'தாய் என் கிளவி இயற்கையாகும்' என்பதன் காரணம் யாது?

9. உண்டு என்னும் சொல் புணரும் முறையை எழுதுக.

10. மூன்று முன் நகாரம் ஆகும் – விளக்குக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அளவைப் பெயர் முன் அரை, குறைப் புணர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) சாரியைகள் பட்டியலிடுக.

12. (அ) போலி என்றால் என்ன? வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) மெய்ம்மயக்கம் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

13. (அ) 'மகப் பெயர்க்கு இன்னே சாரியை' – விளக்குக.

(அல்லது)

(ஆ) ஔகார ஈற்றுப்புணர்ச்சியைச் சான்றுடன் விளக்குக.

14. (அ) 'வகர மிசையும் மகரங் குறுகும்' – விளக்குக.

(அல்லது)

(ஆ) லகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை விளக்குக.

15. (அ) இடைத் தொடர், ஆய்தத் தொடர் குற்றியலுகரப் புணர்ச்சியை எழுதுக.

(அல்லது)

(ஆ) தொள்ளாயிரம் –புணர்ச்சியை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விளக்குக.

16. பிறப்பியல்ச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

17. உருபியல் செய்திகளை விளக்குக.

18. இகர, ஈகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை விளக்குக.

19. னகர ணகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை விளக்கிச் சான்று தருக.

20. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியை விளக்குக.

| F–0841 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Fourth Semester**

தமிழ்

சிற்றிலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மாணிக்கவாசகர் சொல்லச் சிவபெருமான் எழுதிய நூல் யாது?

2. கருணை விழியாள் யார்?

3. நூபுரம் என்பது என்ன?

4. அம்புலியை அழைக்கும் உபாயம் எவை? எவை?

5. காமச் கோட்டம் என்பது என்ன?

6. உலா பாடும் காரணம் யாது?

7. சோழனின் படைத் தலைவர் யார்?

8. தென்னர் ஆதி நராதிபர் யார்?

9. கலம்பக உறுப்புகள் எத்தனை?

10. தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் எனச் சிறப்பிக்கக் காரணம் யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ் பயிராக வளர்ந்த விதத்தை தமிழ்விடுதூது மூலமாக விளக்குக.

(அல்லது)

(ஆ) நாயன்மார்களின் பக்திச் சிறப்பைத் தமிழ்விடுதூது கொண்டு புலப்படுத்துக.

12. (அ) மீனாட்சி அம்மையின் சிறப்புக்களை அம்புலிப்பருவம் கொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) அங்கையற்கண்ணியின் சிறப்புக்களாக செங்கீரைப்பருவம் குறிப்பிடுவது யாது?

13. (அ) இராஜராஜன் உலா வரும்போது பெதும்பை பருவ மகளிர் எவ்வாறு காதல் கொண்டனர்?

(அல்லது)

(ஆ) இராஜராஜசோழனுலா குறிப்பிடும் நீர் விளையாட்டுக் குறித்து எழுதுக.

14. (அ) கடல் போல் எழுந்த கலிங்கப்படை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அரசனைக் காண வந்தவர்கள் கொண்டு வந்த காணிக்கைப் பொருள் குறித்து எழுதுக.

15. (அ) நந்திவர்மனைக் கண்ட தலைவியின் நிலை யாது?

(அல்லது)

(ஆ) நந்திவர்மனின் பெருமைகளை விவரி.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழின் சிறப்புக்களைத் தமிழ்விடுதூது வாயிலாக விரித்துரைக்க.

17. அம்புலிப்பருவத்தின் சிறப்பினை மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் வாயிலாகக் கட்டுரைக்க.

18. இராஜராஜ சோழனின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

19. கலிங்கத்துப்பரணிப் பாடல் செய்திகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

20. நந்திவர்மனின் ஆட்சி சிறப்புக் குறித்துக் கட்டுரை வரைக.

**F–0842**

**Sub. Code**
**7SBS4A1**

# B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024

## Fourth Semester

தமிழ்

திறன் அடிப்படையிலான பாடம் – தமிழிசைக் கலைகள்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக.

1. பழந்தமிழரின் இசைக் கருவிகள் நான்கன் பெயர்களைக் குறிப்பிடுக.

2. சந்தப் பாடல்களில் தொங்கல் அமைப்பை அறிமுகப்படுத்தி, ‘திருப்புகழ்’ இசைத்தவர் யார்?

3. யாழின் வகைகளைக் குறிப்பிடுக.

4. ‘தடாரி’ என்னும் இசைக் கருவிக்குரிய வேறுபெயர் யாது?

5. நாட்டுப்புற இசைக்கு வழங்கும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

6. ‘பண்ணத்தி’ – குறிப்பு வரைக.

7. செவ்வழிப்பண் – எந்த நிலத்துக்கு உரியது?

8. ‘பதம்’ – பொருள் தருக.

9. மதங்க சூளாமணி - நூலின் ஆசிரியர் யார்?

10. இரவீந்திர நாத் தாகூருடன் இணைந்து கலைப் பணி செய்த தமிழறிஞர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திருக்குறள் தொடர்பாக வெளிவந்துள்ள இசை நூல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பழந்தமிழர் இசை முறையில் அமைந்த சிலப்பதிகாரப் பாடல்கள் எவை? விளக்குக.

12. (அ) குழலிசை குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'தோற்கருவிகள்' எவை? அவற்றை விளக்குக,

13. (அ) நாட்டுப் பாடல்களின் சிறப்பியல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நையாண்டி மேளத்தைப் பக்க இசையாகக் கொண்ட தமிழக நாட்டுப்புற ஆட்டங்கள் எவை? விளக்குக.

14. (அ) ஐந்திணைகளுக்குரிய பண்கள் எவை? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஒரு கூடம் நல்ல மேளக்கட்டுள்ளது' என்பதற்கான இயல்புகள் யாவை?

15. (அ) கோடீஸ்வர ஐயரின் – இசைப் பங்களிப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பீதோவனின் இசைத்திறமையை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. திருஞான சம்பந்தரின் அருட்பதிகங்களில் புலப்படும் இசைச் சிறப்பினை விவரிக்க.

17. சங்க காலத்து யாழின் வகைகளை விளக்கிக் கட்டுரை தருக.

18. நாட்டுப்புற இசைப்பாடல்களை விளக்கிக் கட்டுரை எழுதுக.

19. இசை எழுதும் பயிற்சி முறை குறித்து எழுதுக.

20. கலை மேதை வாசுதேவனின் கலைவாழ்வு குறித்துக் கட்டுரை தருக.

———————

| F–0843 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Sixth Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் – பேச்சுக்கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் பேச்சுத் தொடர்பானவை?

2. மேடைப் பேச்சின் வகைகள் எத்தனை?

3. ஜார்ஜ் கோப்ஸ் கூறும் தொடக்கம் யாது?

4. கவிதை கூறி முடித்தல் என்றால் என்ன?

5. மேடைப் பேச்சு என்றால் என்ன?

6. உவகைப் புலவர் யார்?

7. சிந்தனைப் பேச்சு என்றால் என்ன?

8. இந்திய வரலாற்றில் புகழ் பெற்ற பேச்சாளர் சிலரைக் குறிப்பிடுக?

9. பேச்சின் வலிமை என்றால் என்ன?

10. மக்களாட்சி என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இலக்கிய உரைகள் என்றால் என்ன விளக்குக.

(அல்லது)

(ஆ) கல்லூரி மாணவர்களிடம் எவ்வாறு பேச வேண்டும்.

12. (அ) பேச்சில் நேரத்தை எவ்வாறு கணக்கிட வேண்டும்.

(அல்லது)

(ஆ) நாளின் சிறப்பினைக் கூறி, குறிப்பிட்டுத் தொடங்குதல் என்றால் என்ன?

13. (அ) வரவேற்புரை எவ்வாறு அமைய வேண்டும் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆண்மீகப் பேச்சு எவ்வாறு அமைய வேண்டும் விளக்குக.

14. (அ) மகளிர் அரங்குகளின் எவ்வாறு பேசவேண்டும்?

(அல்லது)

(ஆ) குழந்தைகளுக்காக எவ்வாறு பேச வேண்டும் விளக்குக.

15. (அ) பேச்சில் உயர்ந்த மனிதர்களைப் பற்றி எவ்வாறு எடுத்துரைக்க வேண்டும் விளக்குக.

(அல்லது)

(ஆ) பேச்சின் உரிமை குறித்து விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பேச்சின் தொடக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் விளக்குக.

17. சிறந்த சொற்பொழிவாளரின் பண்புகள் குறித்து விளக்குக.

18. பல்வகை சொற்பொழிவுகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. நேர்முக வருணனைகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. பேச்சில் தன்னம்பிக்கைக் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–0844 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Sixth Semester**

தமிழ்

சங்க இலக்கியம் – புறம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　(10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. பேகனைப் பாடிய புறநானூற்றுப் புலவர்கள் யார்?

2. 'தாபத நிலை' என்றால் என்ன?

3. இளவிச்சிக்கோ யாரது சகோதரன்?

4. ஏறைக்கோனைப் பாடிய பெண்பாற்புலவர் யார்?

5. 'எல்லோர்க்கும் கொடுமதி' என மனையாளுக்குக் கூறிய புலவர் யார்?

6. 'நீயும் ஒன்று இனியை; அவரும் ஒன்று இனியர்' – விளக்குக.

7. ஐந்தாம் பத்து எந்தச் சேர அரசனைப் போற்றுகிறது?

8. பரணர் பெற்ற பரிசில் யாது?

9. ஆற்றுப்படை என்றால் என்ன?

10. கடையேழு வள்ளல்கள் யார்? யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) பாணாற்றுப்படைத் துறையை விளக்கி, நும் பாடல்பகுதிப் பாடலைப் பொருத்திக் காட்டுக.

(அல்லது)

(ஆ) கோப்பெரு நற்கிள்ளியின் கொடை மடத்தை விவரி.

12. (அ) "நீயும் முயங்கற்கு ஒத்தனை மன்னே!" – விளக்குக.

(அல்லது)

(ஆ) கொண்கானங்கிழானது சிறப்பைப் புறநானூறு எவ்வாறு போற்றுகிறது?

13. (அ) பார்ப்பன வானகத் துறையைப் பாடப்பகுதி வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பிட்டங்கொற்றனது கொடைச் சிறப்பைப் புலப்படுத்துக.

14. (அ) 'பாடு விறளியர் பல்பிடி பெறுக!' – விளக்குக.

(அல்லது)

(ஆ) விறலியாற்றுத்துறை வழி, பரணர் சேரமன்னனை எவ்வாறு போற்றுகிறார்?

15. (அ) மதுரை நகரச்சிறப்பை சிறுபாணாற்றுப்படை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) வேலூர் நகரில் பாணர்கள் பெறும் விருந்து யாது?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பேகனது குறைகளைப் புறநானூற்றுப் புலவர்கள் எவ்வாறு வழிகாட்டித் தீர்க்க முற்படுகின்றனர்?

17. குமணனது கொடைச் சிறப்பை விவரி.

18. பெருஞ்சித்திரனாரது புலமைத்திறத்தைப் பாடப்பகுதி வழி விளக்குக.

19. செங்குட்டுவனது சிறப்பினைப் பதிற்றுப்பத்து வழி விளக்குக.

20. நல்லியக்கோடனது சிறப்பை ஆற்றுப்படை வழி விளக்குக.

———————

| F–0845 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024.**

**Sixth Semester**

தமிழ்

தொல்காப்பியம் – பொருளதிகாரம்

**(CBCS 2017 onwards)**

Time : 3 Hours — Maximum : 75 Marks

**பகுதி அ** — $(10 \times 2 = 20)$

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடைதருக.**

1. ஆடவர் இயல்பு யாது?

2. மறையோர் தேயத்து மன்றல் எத்தனை?

3. அலர் என்றால் என்ன?

4. 'தலைவி அருள் மொழி' என்றால் என்ன?

5. ஒரு பால் கூற்றிற்குரியோர் யார்? யார்?

6. மெய்ப்பாடு – எத்தனை வகைப்படும்?

7. உவமும் பொருளும் – விளக்குக.

8. இரட்டைக் கிளவி என்றால் என்ன?

9. குருளைப் பெயர் எவ்விலங்கிற்கு உரிய இளமைப் பெயர்?

10. காண்டிகை உரை என்றால் என்ன?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடைதருக.**

11. (அ) களவொழுக்க உணர்வுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வரைதல் எத்தனை வகைப்படும்? வகைகளை விளக்குக.

12. (அ) கரணம் எனப்படுவது குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பிரிவு என்றால் என்ன? எதன் பொருட்டு பிரிவு நிகழலாம்?

13. (அ) உள்ளுறை – அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பெருமிதத்திற்கு உரிய மெய்ப்பாடு குறித்து எழுதுக.

14. (அ) உவமத்தோற்றம் எவ்வாறு அமையும்?

(அல்லது)

(ஆ) உரு உவம உருபுகள் குறித்து எழுதுக.

15. (அ) ஆண்பால் பெயர்கள் எவையென மரபியல் கூறுகிறது?

(அல்லது)

(ஆ) நூல் வகைகளைக் கூறுக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

**எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.**

16. தலைவிக்கு நிகழும் கூற்றினை விளக்குக.

17. வாயில்களுக்குரிய கூற்றுக் குறித்து எழுதுக.

18. ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகளை எழுதுக.

19. உவம உருபுகள் குறித்து எழுதுக.

20. மரபியல் கூறும் உயிர்ப்பாகுபாடு குறித்து எழுதுக.

———————

| F–0846 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024.**

**Sixth Semester**

தமிழ்

மொழி வரலாறு

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours  Maximum : 75 Marks

**பகுதி அ**  $(10 \times 2 = 20)$

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.**

1. மொழியியல் என்றால் என்ன?

2. ‘போலச் செய்தல்’ விளக்குக.

3. ‘இரட்டைக் கிளவி’ என்பது யாது?

4. பாம்பு குறித்து வழங்கப்படும் வேறுசொற்கள் யாவை?

5. ‘வெறுஞ்சொற்கள்’ விளக்கம் தருக.

6. ‘கடன் வாங்கல்’ என்றால் என்ன?

7. ஒலியில் நிகழும் மாறுதல்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

8. அடிச்சொற்கள் – குறிப்பு வரைக.

9. சொற்களில் ஒட்டுநிலை என்பது யாது?

10. சித்திய மொழிகள் எனப்படுவது யாது?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.**

11. (அ) பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) போலச் செய்தலின் சிறப்பியல்பினை விவரி.

12. (அ) சொற்களின் பிறப்பு வரலாற்றைக் கூறுக.

(அல்லது)

(ஆ) எண் பாகுபாடு குறித்தெழுதுக.

13. (அ) கால்டுவெல் கூறும் வடமொழிக்கும் திராவிட மொழிக்கும் பொதுவாக உள்ள சொற்களை ஆராயும் முறையை எடுத்துக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஒலி வேறுபாடுகள் பற்றி விவரிக்க.

14. (அ) ஒரு பொருட்கிளவிகள் குறித்து வரையறுக்க.

(அல்லது)

(ஆ) சைகை மொழி குறித்து விவரிக்க.

15. (அ) தனிநிலை மொழிகளின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுத்தின் தோற்றத்தை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.**

16. 'மக்களால் வளர்க்கப்படும் கலை மொழியே' என்று மு.வ. கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. ஒப்புமையாக்கம் – தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பினை விவரி.

18. ஒலித்திரிபுகள் குறித்து நும்பாடப்பகுதி கூறுவனவற்றை விரித்துரைக்க.

19. சிறப்புமொழி குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

20. மொழி நிலையின் வகைகளைப் புலப்படுத்துக.

| F–0847 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLTE3A |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024

### Sixth Semester

தமிழ்

விருப்பப்பாடம்: கல்வெட்டியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. தமிழ் எழுத்தின் காலம் யாது?

2. சமஸ்கிருத மொழியின் ஒலிகளைச் சரியாக எழுதப் பயன்பட்ட எழுத்து யாது?

3. ஆணைமலையில் கிடைத்த பழங்கால எழுத்து யாது?

4. பகீரதச் செப்பேடு குறித்து எழுதுக.

5. கரோஷ்டி கல்வெட்டு படித்த வெளிநாட்டவர் யாவர்?

6. கல்வெட்டுக்கள் குறித்தக் கட்டுரைகள் வெளிவந்த இதழ்கள் பற்றிக் குறிப்பிடுக.

7. நாள் எழுத்து என்றால் என்ன?

8. எழுத்து எந்தெந்த அடிப்படையில் வளர்ச்சி பெற்றது?

9. செப்பேட்டில் காணப்படும் மங்கலச் சொற்கள் யாவை?

10. சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட செப்பேடுகள் எத்தனை உள்ளன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளி.

11. (அ) இந்திய எழுத்துக்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நெடுமான் அஞ்சி காலக் கல்வெட்டுக் குறித்து எழுதுக.

12. (அ) கல்வெட்டில் கிடைத்துள்ள நில அளவைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) முத்தரையர் காலக்கல்வெட்டுகள் குறித்து எழுதுக.

13. (அ) கல்வெட்டில் படி எடுக்கும் முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள கல்வெட்டுக்கள் குறித்து எழுதுக.

14. (அ) பானை ஓடுகளில் காணப்படும் உருவ எழுத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) லலித விஸ்தர புத்தமத நூல் கூறும் செய்திகள் யாவை?

15. (அ) பல்லவர் காலச் செப்பேடுகளின் பிரிவுகள் யாவை?

(அல்லது)

(ஆ) மஞ்சிக் கல்லுக் கல்வெட்டுக் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளி.

16. வட்டெழுத்து காலந் தோறும் பெற்ற மாற்றம் குறித்துக் கட்டுரை வரைக.

17. எண்கள் குறித்துக் கட்டுரை வரைக.

18. கல்வெட்டாய்வு குறித்துக் கட்டுரை வரைக.

19. பண்டைத் தமிழ் எழுத்துக்கள் மற்றும் உருவ மாற்றம் குறித்துக் கட்டுரை வரைக

20. பல்லவச் செப்பேடும் இலக்கியமும் குறித்துக் கட்டுரை வரைக.

————————

| F–0848 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLTE3B |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024

**Sixth Semester**

தமிழ்

விருப்பப்பாடம் – தன்மேம்பாட்டியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. க.ப. அறவாணன் 'முடியும்.. முடியும்.. முடியும்..' என்று கூறுவன யாவை?

2. மனம் திறந்து பாராட்ட வேண்டிய முறையினைக் கூறுக.

3. பிறரை மதிக்கும் முறையினை க.ப. அறவாணன் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

4. சிக்கலைத் தீர்ப்பதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டியவற்றைக் கூறுக.

5. 'கல்கி' என்ற ஆளுமையினைக் குறிப்பிடுக.

6. நூறாண்டு வாழும் முறை குறித்துக் கூறுக.

7. 'மனதில் பதிந்த விதை' விளக்கம் தருக.

8. நகைச்சுவையில் மாணவர் தனித்திறன் குறித்து எழுதுக.

9. மனிதனாக வாழ்வதற்கு நாம் செய்ய வேண்டிய முறையினைக் கூறுக.

10. பேச்சில் வெளிப்படும் ஆளுமைப் பண்பு யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'தொண்டு செய்யுங்கள்' என்பதில் காணலாகும் வாழ்வியல் கருத்துக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) க.ப.அறவாணன் அவர்கள், 'நல்லதையே எண்ணுங்கள்' என்று கூறும் கருத்தினைத் தொகுத்துரைக்க.

12. (அ) "சரியாகக் கவனியுங்கள்" என்ற தலைப்பின் மூலம் நூலாசிரியர் சமுதாயத்திற்குக் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மன்னிக்கத் தெரிந்து கொள்ளும் உயர்ந்த குணம் குறித்துக் கட்டுரை வரைக.

13. (அ) கண்ணதாசனைக் காவியதாயின் இளைய மகன் என்ற கூறும் காரணத்தினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டிய காரணங்களைக் குறிப்பிடுக.

14. (அ) 'தாராபாரதி, தனித்தன்மைக் கவிஞர்' என்ற கருத்தினை நிறுவுக.

(அல்லது)

(ஆ) 'நூல்' மனிதரை எவ்வாறு பண்புள்ளவராக மாற்றுகிறது என்ற கருத்தை விவரிக்க.

15. (அ) 'காலதரிசனம்' குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஹைகூக் கவிதை அணிவகுப்புக் குறித்து எழுதுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. 'பாறைகளைப் பாதையாக்குங்கள்' என்று க.ப.அறவாணன் கூறும் கருத்தினைத் தொகுத்துரைக்க.

17. தேவைகளைச் சுருக்குவதன் மூலம் வாழ்க்கையில் நாம் அடையும் நன்மைகளைத் தொதுத்துரைக்க.

18. 'வாழ்க்கை வெளிச்சங்கள்' குறித்துக் கட்டுரை வரைக.

19. சாதனையாளர் ஆளுமை குறித்து மதிப்பிடுக.

20. கவிதை அணிவகுப்பு குறித்துக் கட்டுரை எழுதுக.

———————

| F–0849 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS6A1 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024

### Sixth Semester

தமிழ்

திறன் அடிப்படையிலான பாடம் : படைப்பாக்கவியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வெண்பாவுக்குரிய இலக்கணம் தருக.

2. ஆசிரியப்பா மரபினை விளக்குக.

3. புதுக்கவிதையில் குறியீடு இடம்பெறுவது எவ்வாறு?

4. ஹைக்கூக் கவிதைகள் புனைந்த கவிஞர்கள் பெயர்களைக் குறிப்பிடுக.

5. சிறுகதையின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

6. ஜெயகாந்தனின் சிறுகதைகளை மதிப்பிடுக.

7. நாடகத்துறைக்குப் பங்களித்தோர் பெயர்களைக் குறிப்பிடுக.

8. நாடகத்திற்கான வசனம் எவ்வாறு அமைதல் நன்று?

9. டாக்டர். மு.வ.வின் கட்டுரைப் பாங்கைக் குறிப்பிடுக.

10. இலக்கியக் கட்டுரை படைத்த அறிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'முயற்சி வெற்றி தரும்' என்ற பொருண்மையில் ஆசிரியப்பா புனைந்தளிக்க.

(அல்லது)

(ஆ) 'எல்லாப் புகழும் தரும்' என்பதை ஈற்றடியாகக் கொண்டு மூன்று வெண்பாக்கள் இயற்றுக.

12. (அ) 'உடைபடும் மௌனங்கள்' எனும் பொருண்மையில் புதுக்கவிதை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஒரு பூவின் புன்னகை' எனும் பொருண்மையில் ஐந்து ஹைக்கூக் கவிதைகள் புனைக.

13. (அ) 'விடை தெரியாத விடுகதை' எனும் தலைப்பில் ஒரு பக்கக் கதை தருக.

(அல்லது)

(ஆ) உம்மைப் பாதித்த ஒரு நிகழ்வை மையப்படுத்தி ஒரு பக்க அளவில் சிறுகதை எழுதுக.

14. (அ) சமூக விழிப்புணர்வு நாடகங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும்?

(அல்லது)

(ஆ) வரலாற்று நாடகங்கள் இயற்றும் போது அவற்றின் மொழிநடை எவ்வாறு இருத்தல் சிறப்பு என விவரிக்க.

15. (அ) உம்மைக் கவர்ந்த கட்டுரையாளர் பற்றிய அறிமுகம் தருக.

(அல்லது)

(ஆ) உமது பகுதியில் சொல்லப்பெறும் பழமொழிகளை விளக்கிக் கட்டுரை தருக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. 'என்றெமதின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?' என்ற பொருண்மையில் நெடிய மரபுக் கவிதை இயற்றுக.

17. 'பேசாப் பொருள்கள் பேசினால்,,,' என்ற தலைப்பில் புதுக்கவிதையோ, அல்லது பத்துக்கும் குறையாத ஹைக்கூக் கவிதைகளோ எழுதுக.

18. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்று பற்றிச் சிறுததை எழுதுக.

    (அ) கண்ணீர் எழுதிய கதை

    (ஆ) நினைவுகள் இறப்பதில்லை

    (இ) மறுபடியும்

19. பின்வரும் பொருண்மைகளுள் ஏதேனும் ஒன்றினை மையப்படுத்தி ஓரங்க நாடகம் எழுது.

    (அ) கடையெழு வள்ளல்கள் யாரேனும் ஒருவரைப் பற்றிய வரலாற்று நாடகம்

    (ஆ) மனித நேயத்தை வலியுறுத்தும் சமூக நாடகம்

    (இ) சமூக அவலத்தை விலக்கவுதவும் நகைச்சுவை நாடகம்

20. ஏதேனும் ஒரு தலைப்பில் கட்டுரை தருக.

    (அ) நம்பிக்கையென்னும் நல் மருந்து

    (ஆ) என்னைக் கவர்ந்த நூல்

    (இ) தமிழர் தம் மரபு சார்ந்த விழாக்களும் விளையாட்டுக்களும்

---

| F–0850 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS6A2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Sixth Semester**

தமிழ்

திறன் அடிப்படையிலான பாடம் : தமிழ் பயிற்றும் முறை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. கல்வித்திட்டத்தில் முதலிடம் பெற வேண்டிய மொழி யாது?

2. கல்வியின் நோக்கம் யாது?

3. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தமிழ் கற்பித்தல் எவ்வாறு இருந்தது?

4. மாண்டிசோரி முறை குறிப்பு வரைக.

5. பயிற்றுவித்தலில் வாய்மொழிப் பயிற்சிகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன?

6. வாய்மொழிப் பயிற்சிக்கு நடிப்பு எவ்வாறு உதவுகிறது?

7. படிப்பின் உயிர் நாடி – யாது?

8. கதைக் கட்டுரை எழுதுதற்குரிய முறை யாது?

9. ஒருமொழிக்குரிய இருவகை இலக்கிய வடிவங்களை எடுத்துரைக்க.

10. இலக்கணத்தைக் கற்பதால் ஏற்படும் பயன்களைக் குறிப்பிடுக.

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'தாய்மொழியே பயிற்று மொழியாதல் நன்று' என்பதற்கான காரணங்களைத் தருக.

(அல்லது)

(ஆ) கல்வித்திட்ட ஆராய்ச்சி – குறித்து எழுதுக.

12. (அ) பயிற்றுவித்தலின் பழைய முறைகளில் அமைந்த குறைபாடுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'குழந்தைகளின் தோட்டம்' – (Kindergarten)முறையை விவரிக்க.

13. (அ) வாய்மொழிப் பயிற்சிக்குச் சொற்பொழிவுகள் உதவும் பாங்கினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுதுவதற்கு முன் மேற்கொள்ளத்தக்க முற்பயிற்சிகளைத் தொகுத்துரைக்க.

14. (அ) 'மொழிப்பயிற்சி இன்றியமையாதது' என்பதற்கான காரணங்களை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) படைப்பாற்றலுக்குத் தூண்டுகோலாக அமைவன யாவை? விளக்குக.

15. (அ) கவிதை கற்பித்தலின் நோக்கங்களையும் கவிதைகளைத் தேர்ந்தெடுத்தல் பற்றியும் விவரிக்க.

(அல்லது)

(ஆ) பயிற்றுவித்தலில் இலக்கணம் பெறும் இன்றியமையாத இடத்தினைச் சுட்டுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழ்மொழியைப் பயிற்றும் நோக்கங்களை எவ்வாறு செயல்படுத்தலாம் என்பதை விவரிக்க.

17. பயிற்றலின் உபாயங்கள் குறித்து டாக்டர் ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்துரைக்க.

18. கற்றலில் கையெழுத்து இன்றியமையாது இடம் பெறுதலை விளக்கிக் கட்டுரை படைக்க.

19. இலக்கியம் பயிற்றுவித்தலில் மேற்கொள்ள வேண்டிய முறைகளை விளக்குக.

20. இலக்கணம் கற்றலின் இன்றியமையாமையை எடுத்துரைத்து அதற்கான பயில்முறைகளை விவரிக்க.

———————